**OS No.118/2018**

PW 1 – கண்ணன்

நாள் 20.01.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 7 ஆவணம் நான் ஜீவானந்தம் அவர்களிடம் கொடுத்து எடுக்க சொன்ன ஆவணம் என்றால் சரிதான். இந்த ஆவணமானது மானாமமதுரை டி.மு கோர்ட் அசல் வழக்கு எண் 138/96 வழக்கின் Ex B 1 ஆக தாக்கல் செய்யப்பட்டது.

அசல் வழக்கு எண் 138/96 வழக்கைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 138/96 ல் யார் வாதி, யார் பிரதிவாதி போன்ற விபரங்களும் அந்த வழக்கு எந்த சொத்துக்களுக்கான வழக்கு என்பதும் எனக்குத் தெரியாது.

நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள விபரங்களை சிவராமம் சொன்னார். அந்த வழக்கு தாக்கல் செய்த போது லெட்சுமிஅம்மாள் 20.07.1948 ல் இறந்து போனதாக 27.08.2015 ல் இறப்பை பதிவு செய்த ஆவணத்தின் ஜெராக்ஸையும் 05.12.2015 ம் தேதிய வாரிசு சான்றின் ஜெராக்ஸையும் தாக்கல் செய்துள்ளேன்.

அதன் அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளது. அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வேறு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் இவ்வழக்கில் Ex B 3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள Suit Register Extract ஐ பார்க்கவில்லை.

Ex B 3 ன் படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. லெட்சுமியம்மாள் 20.07.1948 ல் இறந்து அதை 27.08.2015 ல் பதிவு செய்த விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை.

நீங்கள் தாக்கல் செய்துள்ள இரண்டு ஆவணங்களையும் என்ன காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீதிமன்றத்தில் அசல் ஆவணம் கேட்டதனால் வா.சா.ஆ 7 மற்றும் வா.சா.ஆ 8 ஐ தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ 8 க்கான கவரிங் லெட்டருக்கு உரிய விபரம் எனக்குத் தெரியாது. என் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும்.

நான்குவிதமான சர்வே காலங்கள் இருக்கும் விபரம் எனக்குத் தெரியும். அதில் வா.சா.ஆ 8 ஆவணம் செட்டில்மெண்டிற்கு பின்பு யூ.டி.ஆர் சர்வே கால ஆவணம் ஆகும். வா.சா.ஆ 8 ஆவணத்தில் எந்த சர்வே காலம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 7 ஆவணத்தின் நகலை 2021 ல் எடுத்துவிட்டேன் என்றால் சரிதான்.

இவ்வழக்கில் எதிர்வழக்குரையில் அசல் வழக்கு எண் 138/96 என்ற வழக்கை லெட்சுமியம்மாள் 1 ம் பிரதிவாதியாக இருந்து நடத்தியுள்ளார் என்றும், அதனால் அவர் 1948 ல் இறக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டதால் வா.சா.ஆ 7 ஆவணத்தை எடுத்துப்பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் 2021 ல் நகலை எடுத்துவிட்டு வழக்கு விசாரணை நடைபெறும் சமயத்தில் தாக்கல்செய்யாமல் தற்போது ஏன் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் உண்மை ஆவணம் கிழிந்துவிட்டதால் தற்போது தான் வழக்கறிஞர் அறிவுறுத்தலின் பேரில் நகல் போட்டு தாக்கல் செய்துள்ளேன்.

இந்த வழக்கில் 05.02.2020 ல் நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆவணம் கிழிந்துவிட்டதால் நகல் எடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 1 பிரதிவாதி லெட்சுமியம்மாளும் நான் தாக்கல் செய்துள்ள பிராதில் குறிப்பிட்டுள்ள 1948 ல் இறந்ததாக சொல்லப்பட்டுள்ள லெட்சுமியம்மாளும் வேறு வேறு நபர்கள் என்றால் சரியல்ல.

என் வழக்குப்படி சிவராமன் லெட்சுமியம்மாளுக்கு தந்தைவழி பாட்டி ஆவார். நான் தந்தைவழி பாட்டி என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. லெட்சுமியம்மாளின் கணவர் பிச்சுஅய்யர் தான் என்றும் அவருக்கு அலைஸ் நேயம் கிடையாது என்றால் சரியல்ல.

லெட்சுமியம்மாள் – பிச்சுஅய்யருக்கு பிறந்த பிள்ளை சிவராமன் கிடையாது என்றும், எஸ்.பி.சுப்பிரமணியன் தான் அவர் பிள்ளை என்றும் ஆவணத்தின் படி சொல்கிறேன் என்றால் அது பொய்யாகும். லெட்சுமியம்மாள் –

பிச்சுஅய்யருக்கும் சோமநாதன் என்ற பிள்ளை இல்லை என்றும் நீங்கள் லெட்சுமியம்மாளின் இறப்பு சான்றை 2015 ல் உற்பத்தி செய்து கொண்டு 2016 ல்போலியான வாரிசு சான்றை அரசு அதிகாரிகளின் குற்ற உடந்தையுடன் பெற்றுள்ளீர்கள் என்றால் இல்லை.

லெட்சுமியம்மாள் – பிச்சுஅய்யரின் மகனான எஸ்.எம்.சுப்பிரமணியனுக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்டால் அது எனக்குத் தெரியாது. எஸ்.எம்.சுப்பிரமணியனுக்கு சரவணகுமார் என்ற ஆண்பிள்ளையும், மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

நீங்கள் சம்பந்தமில்லாத சோமநாதன் சிவராமன் என்பவரை பயன்படுத்தி சொத்துக்களை அபகரிக்கும் நோக்குடன் போலியான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இதே அசல் வழக்குடன் OS.No.116/2018, OS.No.117/2018 ஆகிய இரண்டு வழக்குகளை தாக்கல் செய்து இதே நீதிமன்றதில் பூரணவிசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் அனுபவம் செய்த நபர்களே என்னிடம் இருந்து முறையாக கிரயம் வாங்கிவிட்டார்கள்.

என்னிடம் சொத்தை கிரயம் வாங்கியதற்கான ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**